**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No.62/2021

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06ம் நாள் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திருமதி. ஜெயந்தி | வயது: 50 |
| த/பெ. : திரு. மகுடீஸ்வரன் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி ஆஜர். 1ம் பிரதிவாதி ஆஜர் இல்லை. 2 முதல் 5 பிரதிவாதிகள் தோன்ற தரப்பினராக உள்ளார்கள். வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 21.06.1978 – 2,3 பிரதிவாதிகளிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 1** |
| 7.9.2007 – 4,5 பிரதிவாதிகள் மகுடீஸ்வரனுக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 2** |
| 12.11.2009 – வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம்(அசல் கிரைய ஆவணம் என் கணவரிடம் உள்ளது என்று சாட்சி கூறுகிறார்) | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 3** |
| 12.11.2009 – 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 4** |
| 18.02.2021 – திருப்பூர் தெற்கு வீரபாண்டி கிராமம் க.ச.எண். 739/2 பி2 ஏ 1 பட்டா எண்.4161 க்குரிய சிட்டா | கணினி நகல் | **வா.சா.ஆ 5** |

| | | |
|---|---|---|
| மாதிரி வரைபடம் | | **வா.சா.ஆ 6** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.08.06 18:52:46 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.